1981 மார்ச் 5]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) இல்லை.

[முற்பகல் 9-10]

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மக்களுடைய நீண்டகால விருப்பமான விவசாயக் கல்லூரியை அங்கே அமைக்க மறு பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, புதிதாக விவசாயக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை. ஆனால், குடுமியான்மலையில் 96 லட்சம் ரூபாய் செலவில் பல பயிற்சிகள் அளிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயருக்கு மேலும் சிறப்பும், புகழும் சேர்க்கும் வகையில் அங்கே விவசாயக் கல்லூரியை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதைக் கருத்திலே கொண்டுதான் அங்கே பல பயிற்சிகளை அளிக்கும் திட்டம் ஆய்வில் இருக்கிறது.

திருப்பத்தூர் நகரை அழகுபடுத்துதல்.

* வினா எண். 382—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரத்திலுள்ள சாலைகளை அகலப்படுத்தி திருப்பத்தூர் நகரை அழகு படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இந்தத் திட்டம் பற்றி திருப்பத்தூர் நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ப. சுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த திருப்பத்தூர் சாலை சரியாக இல்லாத காரணத்தினால், அங்கே பல விபத்துக்கள் நடைபெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு வந்திருந்த போது, மேடையிலே இதைப்பற்றிச் சொன்னோம். ஆனால், இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுத்து, இந்தத் திருப்பத்தூர் நகரை அழகுப்படுத்தும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் திருப்பத்தூருக்கு சுற்றுப்பயணம் சென்றபோது, மாண்புமிகு உறுப்பினர் என்னுடன் வந்திருந்தார்கள். அந்த நேரத்திலே உடனடியாக அங்கிருந்த ஆணையாளரை வைத்து, சில திட்டங்களை நிறைவேற்றித் தரும்படி அங்கேயே உத்தரவிட்டேன். அதன்படி ஏறத்தாழ 7 இலட்சம் ரூபாய் செலவிலே பல்வேறு திட்டங்கள் எடுக்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. எனவே, திருப்பத்தூர் நகரை எவ்வளவு அழகுத் திருநகராக ஆக்க முடியுமோ, அதற்கான திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

திரு. ப. சுந்தரம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மைதான். அப்படி உத்தரவிட்டும், அந்த வேலைகள் இன்னும் நடைபெறவில்லை என்பது அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பல்வேறு10 திட்டங்கள் என்னிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்கள் இப்போது செயல்முறையில் இருந்து கொண்டிருக்கிறது. முழுவதும் முடிவடைந்தபின்னர்தான், அதன் அளவு, அழகு தெரியும். ஆகவே, அதுவரை மாண்புமிகு உறுப்பினர் பொறுத்திருந்து கேட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பரமக்குடி நகரசபை.

*வினா எண். 383—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகரசபையை முதல் தர நிலைக்கு உயர்த்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?